1990 சனவரி 19]

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரையிலுள்ள வண்டியூர் கண்மாயில் உணவகம் மற்றும் படகுத்துறை ஆகியவற்றை அமைத்துள்ளது. சிறுவர் இரயில் ஒன்று விடப்பட்டுள்ளது. மத்திய சுற்றுலாத்துறை இங்கு நிரந்தர உணவகம் மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க ரூ. 7,40,000 ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்களுக்கான ரெயில் குறைந்த தூரம் ஓடுகிறது. அதை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்கள் விளையாடுவதற்கான பூங்கா சிறிய அளவே உள்ளது. அதனை விரிவுபடுத்துவதற்கும், சிறிய அளவிலே உள்ள படகுகளை அதிகப்படுத்துவதற்கும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்களை அதிகரிப்பதற்கு திட்டம் இருக்கிறது. ஆனால் படகுகள் விடுவதைப் பொறுத்தவரையில் அங்கே எப்போது தண்ணீர் இருக்கிறதோ அப்போதுதான் படகு விட முடியும். ஏற்கெனவே 7, 8 மாதங்களாக இருக்கின்ற படகுகளே சும்மா இருக்கின்றன. இதற்குமேல் அங்கே படகுகளை அதிகரிக்க திட்டம் இல்லை.

குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*2638. திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

[1990 சனவரி 19

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது திருச்சிக்கும் கரூருக்கும் இடையே ஒரு பேரூராட்சியாக இருந்தாலும், அது நகராட்சியாக இருக்க வேண்டிய ஓர் அமைப்பு. அந்த நகரத்திற்கு நீண்ட காலமாக பேருந்து நிலையம் இல்லை. வேறு தனியாரிடத்திலிருந்து வாடகைக்கு எடுத்து அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்தும் நிலையும், கழிப்பிட வசதிகூட இல்லாத சீரழிந்த நிலையும் அங்கே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அங்கே பேருந்துகள் நின்று சென்றுகொண்டிருக்கின்றன. அதனால் மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே அவசியம் பேருந்து நிலையம் கட்டித்தரப்படுமா? மீண்டும் அதுபற்றி ஆலோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான பிரேரணை ஏதும் தற்போது இல்லை. இருந்தாலும் பேரூராட்சிக்கு உட்பட்ட வைகைநல்லூரில் சர்வே எண். 107/1-ல் அமையப்பட்டுள்ள தற்போதைய தற்காலிக பேருந்து நிலையத்திற்கான இடம் அருள்மிகு பேராளம்மன் ஆலய நிர்வாகத்திடம் இருக்கிறது. பொதுவாக ஒரு கொள்கை அளவில் கோயில் நிலங்களை வேறு எதற்கும் மாற்றுவதற்கில்லை என்று தற்போது இருப்பதை மாற்றி அதற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அது முடிவுற்ற பிறகு இத்திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியிலே சுற்றுப்புறத்தில் இருக்கிற படுகைகள் நஞ்சை நிலங்களாக இருப்பதால், கோயில் நிலங்களைத் தவிர வேறு வசதிகள் அங்கே இல்லாத பேராளம்மன் கோயில் நிலமாக இருந்தாலும் கடம்பர் கோயில் நிலமாக இருந்தாலும் இந்த நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்தில் இருக்கின்றன. இந்த இடத்தில் நில ஆர்ஜிதம் செய்து எப்படி யாவது அதனை கட்டித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

மதுரையில் சுரங்கப்பாதை அமைத்தல்.

*3202. திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரில் கட்டபொம்மன் சிலை அருகே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?